பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 19 திங்கட்கிழமை (03 - 01 - 2000) VALAMPURI ஒலி: 15

★ சமரசப் பேச்சுக்கு அனுமதி கோரி —

# விடுதலைப் புலிகள் தலைவருக்கு சர்வமதக் குழுவினர்கள் கடிதம்

## உணவுத் தடைகளை நீக்க ஆயர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இனப்பிரச்சனை தொடர்பாக விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவற்கு அனுமதி கோரி சர்வமத குழுவின் தலைவர் முறத்தட்டுவ ஆனந்த தேரர் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றைஅனுப்பி வைத்துள்ளார்:

இதே வேளை மன்னார், மறைமாவட்டஆயர் வணபிதா இராயப்பு யோசப் கத்தோலிக்க ஆயர்கள் மன்றத்தின் செயலாளரும் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயருமான வணபிதா மல்கம் ரஞ்சித் ஆகியோர் வன்னிக்கு உணவு மருந்துகள் கொண்டு செல்வதற்கான கட்டுப்பாடுகளைத் தளர்த்தவேண்டுமென்று ஜனாதிபதியைச் சந்தித்து வலியுறுத்தவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா பண்டார நாயக்காகுமாரதுங்க வெற்றி பெற்ற பின் இனப்பிரச்சினை தொடர்பான தனது நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளின்தலைவர்வே. பிரபாகரன் விளக்கி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட பல்வேறு அரசியல் கட்சிகளுக்கும் விடுத்த வேண்கோள்களைத் தொடர்ந்து சர்வமத தலைவர் முறத்தட்டுவ ஆனந்த தேரர் விடுதலைப் புலிகளைச் சந்திப்பதற்கான அனுமதி கோரும் கடிதத்தை அனுப்பிவைத்துள்ளார்

வன்னிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு இதுவரையில் பின் பற்றப்பட்டு வந்த கட்டுப்பாடுகளை

[6ம் பக்கம் பார்க்க]

## ஓயாதஅலைகள் - 3 நடவடிக்கையில் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம்

விடுதலைப் புலிகளினால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவரும் ஓயாத அலைகள் -3 நடவடிக்கையின் போது புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விவரம்

★ மேஜர் மகேந்தி அல்லது மகேந்திரன்[வடிவேல் வசந்தராசா] யாழ்ப்பாணம்

★ கப்டன் பூங்கா [சண்முகம் புஸ்பராணி] யாழ்ப்பாணம்

★ லெப். மங்களா [சுப்பிரமணியம் மஞ்சுளா] மன்னார்

★ 2 ஆம் லெப். மாறங்கு [சண்முகநாதன் கேமமாலினி] யாழ்ப்பாணம்

வீரவேங்கைகளான-

★ கணைத்தேவன் [கேதீஸ்வரன் நவரட்னராஜா]

★ கதிர் நிலவன் [தாமோதரம்பிள்ளை சுதாகரன்] யாழ்ப்பாணம்

★ எல்லைப்படை வீரர் முத்தையா தமிழ்றூபன் ]முள்ளியவளை

## நிலாவெளி மினிமுகாம் மீது தாக்குதல் ஒருவர் பலி! மூவர் காயம்!

திருமலை நிலாவெளியில் கோபாலபுரம் என்னும் இடத்தில் உள்ள கடற்படையினரின் மினி முகாமொன்று விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்கானது.

நேற்றுமுன்தினமிரவு12-40 மணியளல் இடம்பெற்ற இத் தாக்குதல் சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டும், மூவர் காயமடைந்துள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## களுவாஞ்சிக்குடியில் தாக்குதல் இரு பொலிஸார் உட்பட மூவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியில் நேற்று முற்பகல் 10.30 மணியளவில் இடம் பெற்ற கிளைமோர் தாக்குதலில் ஆட்டோவில் பயணம் செய்த இரு பொலிஸார் உட்பட மூவர் கொல்லப்பட்டனர். இருவர் காயமடைந்தனர். என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் மேலும் தெரிவிக்கையில், பட்டிருப்பு பாலம் பொலிஸ் காவலரணில் தமது கடமையை முடித்த பின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்திற்கு ஆட்டோவில் திரும்பிய போதே இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட பொலிஸ் நிலையத்திலிருந்து சுமார் 750 மீற்றர் தொலைவில் வைத்து இத் தாக்குதல் மேற்கொள்ளப் பட்டது.

ஆட்டோ சாரதியான தர்மலிங்கம் தயாளன் என்பவ

[6ம் பக்கம் பார்க்க]

## கொழம்பு குண்டுத் தாக்குதல் சம்பவம் மட்டக்களப்பைச் சேர்ந்த இருவர் கைது!

கொழும்பு மாநகர சபை மைதானத்தில் கடந்த 18 ஆம் திகதி இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக மட்டக்களப்பில் இருவர் குற்றத்தடுப்பு பொலீசாரினால் கைது செய்யப்பட்டு கொழும்புக்கு அழைத்துவரப்பட்டுள்ளனர்.

கொழும்பு குண்டு வெடிப்பின் சூத்திரதாரியாகக் கருதப்படும் தற்கொலைக் குண்டுதாரிப் பெண் எனச் சந்தேகிக்கப்படும் லீலாலட்சுமி என்பவரின் தாயையும், தகப்பனையுமே பொலீஸார் கைது செய்து கொழும்புக்கு அழைத்து வந்துள்ளனர்.

## கொழும்புத்துறையில் வீழ்ந்த ஷெல்லுக்கு எட்டுவயதுச் சிறுவன் பலி மூதாட்டி காயம்

(யாழ்ப்பாணம்)

நேற்றுமாலை 3.15 மணியளவில் கொழும்புத்துறை செபமாலை மாதா கோவிலடியில் வீழ்ந்து வெடித்த ஷெல்லிற்குச் சிறுவன் ஒருவன் பலியானான். மூதாட்டி ஒருவர் காயமடைந்தார்.

கொழும்புத்துறை ஏ. வி. றோட்டைச் சேர்ந்த போல்டிசான் (வயது 8) என்ற சிறுவனே பலியானவராவார்.

இதே சம்பவத்தின்போது காயமடைந்த ஜேக்கப் அனாசிப்பிள்ளை வயது 83) என்பவர் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்,

இறந்த சிறுவனின் உடல் யாழ், போதனாவைத்திய சாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது' [ந58]

## படைவீரர் தலை துண்டிப்பு!

[அம்பாறை]

புத்தாண்டு தினமான நேற்று இரவு அம்பாறைப் பொலீஸ் பிரிவில் கடமையாற்றும் ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் தலை துண்டிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இவரது சடலம் சாக்கு ஒன்றில் கட்டப்பட்டு வீசப்பட்டிருந்ததாகத் தெரியவருகிறது. இச் சம்பவம் தொடர்பாக நால்வர் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளனர்

## தேசியஅரசுக்குத்தலைமை தாங்கும் தகுதி ஜனாதிபதி சந்திரிகாவுக்கே உண்டு

### முன்னாள் அமைச்சர் சிறிசேனகூரே

(கொழும்பு)

''இன்றைய சூழ்நிலையில் தேசிய அரசாங்கமொன்றுக்கு தலைமை தாங்கும் ஆற்றல் உடைய ஒரே தலைவி சந்திரிகா பண்டார நாயக்கா குமாரதுங்கவே

ஐ. தே. க கட்சியின் முன்னால் பொதுச் செயலாளரும் அமைச்சருமான சிறிசேன கூரே தேசிய அரசாங்கம் அமைப்பது தொடர்பாக கருத்து வெளியிடுகையில் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

எந்தவொரு அரசியல் வாதியும் முடிவு எடுக்கும் திறன் படைத்தவராக இருக்கவேண்டும் சரியாக இருந்தாலும் சரி பிழையகா இருந்தாலும் சரி முடிவு எடுக்கும் திறமை ஆற்றல் ஜனாதிபதி சந்திரிகாவுக்கு உண்டு என்பதை நாம் விரும்பியோ விரும்பாமலோ இந்த உண்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

தேசிய கொள்கை ஒன்றை வகுத்து அதன் மூலம் நாட்டின் பிரச்சனைகளுக்கு தீர்வு காணவேண்டியதன் அவசியம் இன்று உணரப்பட்டுள்

(6ம் பக்கம் பார்க்க)

## பொதுத் தேர்தலை எந்நேரமும் நடத்த நாம் தயாராக உள்ளோம்

(கொழும்பு)

பொதுத்தேர்தலை எந்நேரமும் நடாத்துவதற்கு தேர்தல் திணைக்களம் தயாராக இருப்பதாக உதவித் தேர்தல் ஆணையாளர் திரு. கே. சேனநாயக்க அறிவித்துள்ளார்.

1989ம், 1994ம் ஆண்டுகளிலும் ஜனாதிபதி தேர்தல் பொதுத்தேர்தல் இரண்டையும் சொற்ப கால இடைவெளிக்குள் நடத்தியதாகவும் அதே போல் இப் பொதுத் தேர்தலையும் நடாத்தத் தேர்தல் திணைக்களம் தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ( இராசி பலன் )

03.01.2000திங்கட்கிழமை
(தமிழுக்கு மார்கழி 9)

துவாதசி இரவு 6.39வரை: அனுசம் வைகறை2.54வரை, இராகு காலம் காலை 8.36 முதல் 10.04 வரை, சுபநேரம் பகல்10.5 முதல் 2.35 வரை, சித்த யோகம்'

மேடம்—மனக்குளப்பம், அதிக செலவு, வேலைப்பழு.
இடபம்—அசாத்தியத்துணிவு, தொழில் சிறப்பு, நண்பர் பெருமை.
மிதுனம்—வினோத சிந்தனை, புத்திரர் செலவு, சுப காரியம்.
கடகம்- தாழ்ந்த நிலை, பெண் கலகம், அலைச்சல்,
சிங்கம்- தாயார் சினம், கடின வாக்கு, பணமுடை.
கன்னி- கல்வியாளர் நட்பு, தியானம், புதிய சிந்தை.
துலாம்- பதவி மாற்றம், மன முறிவு, நோய் வாட்டும்.
விருச்சிகம்- வெற்றிக்கான அறிகுறி, அதிஸ்டம், பகல் கனவு.
தனுசு- பயந்த மனம், வாகன நஷ்டம், மாமனார்கவலை.
மகரம்- பெரிய இடத்துச் சந்திப்பு, தைரிய மிகுதி, பண வசதி.
கும்பம்- பழைய நட்பு, நல்லோர் நேசம், திட்டமிடுதல்.
மீனம்- துஷ்டர் கவலை, தொழில் பகைமை, கவலை கூடும்.

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

-அனுஷியா

# அந்நிய மோகம் ஏற்படும் இந்நாளில் கவிதை வெளிவருவது அவசியமே

## கவிதை நூல் வெளியீட்டில் உரை

(யாழ்ப்பாணம்)

தமிழர்கள் அந்நிய நாடுகள் மற்றும் சுகபோக வாழ்க்கையை நாடி படையெடுக்கும் இக்கால கட்டத்தில் தமிழை வளர்க்க வேண்டும். தமிழ்ப் பண்பாட்டை வளர்க்க வேண்டும் எனும் குறிக்கோளுடன் இயங்குகின்ற ஏழாலை செந்தமிழ்க் கலை மன்றத்தினரை பாராட்ட வேண்டும். அந்த வகையில் இதனுடன் இணைந்து செயற்படுகின்ற இளங்கவிஞர் பாராட்டத்தக்கவரே.

ஏழாலை ரஜீவன் எழுதிய மௌனத்துயில் நூல் வெளியீட்டுவிழாவில் வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக் கழகப் பேரவை உறுப்பினர் திருமதி மங்கையர்க்கரசி மேற்கண்டவாறு கூறினார்.

யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சி. விசாகரூபன் தலைமையில் நாவலர் கலாச்சார மண்டபத்தில் இடம் பெற்ற விழாவில் தலைவர் தனது தலைமையுரையில்,

செம்மணி பற்றியும் தலைவர் தனது நூலில் ஆழமாக வடித்துள்ளார். துணிச்சலுடன் உண்மையைக் கூறி இருப்பது வரவேற்கத்தக்கது. இடப்பெயர்வு காலத்தில் நான் இங்கு இல்லாத போதும், அவருடைய கவிதை வரிகள் என்னை ஒரு இடப் பெயர்வுக்கே அழைத்து வந்திருக்கிறது. குறிப்பிட்டுச் சொல்லப் போனால், நல்ல முதிர்ச்சியான முன் மாதிரியான கவிஞன் ஒருவனை இந்நூல் இனங்காட்டி உள்ளது என்று குறிப்பிட்டார்.

தற்போது பிள்ளைகள் வேட்டொலியிலேயே கண் விழிக்கின்றனர். இப்போதைய சூழ்நிலைக்கு கட்டாயம் இவ்வாறான கவிதை நூல்கள் வெளிவர வேண்டியது அவசியம். ஒரே விடயத்தில் நில்லாது டரந்து பட்டு எழுத வேண்டுகிறேன். என்றார்.

பண்டிதமணி மு. கந்தையா தனது ஆசியுரையில் ஒவ்வொருவருடைய ஆன்மாவிலும் நிறைய ஆற்றல் தேங்கி நிற்கின்றது அதை வெளிக்கொணர வேண்டும். அந்தப்பணியை ரஜீவன் செவ்வனே நிறைவேற்றி இருக்கிறார் அத்துடன்பாரம்பரிய பண்பாட்டை விட்டு விலகாத யாழ்ப்பாண கவிதைப் பாரம்பரியத்தையும் கவிஞர் விட்டுக்கொடுக்கவில்லை என்றும் குறிப்பிட்டார்.

வெளியீட்டுரையில் கல்வயல் திரு வே.குமாரசாமி தனது பணம் என்று அண்டங்காக்கை போல் கத்தித் திரிவதால் எமக்கு அமைதி இல்லை ஆனால் கவிதையில் மூழ்குபவனுக்கு அமைதி தானாகவே வரும் கவிஞன் முதலில் தன்னை ஆளுவான் பின்பு அவன்தன் கவிதை மூலம் உலகையே ஆளும் வல்லமையைப் பெற்று விடுகிறான் என்றார்.

இந்நிகழ்வில் நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், கவிஞர் கு. முருகையா யாழ். மேலதிக அரசாங்க அதிபர் கு. வைத்திலிங்கம் வலிகாமப் பிரிவு உதவிக்கல்விப் பணிப்பாளர் அ. த. தற்பரானந்தன் உட்பட பலர் கலந்து சிறப்புரையாற்றினர்.

## திருவாசக முற்றோதல்

வதிரி அருள்மிகு பூவற்கரை ஆலயத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை திருவாசக முற்றோதல் இடம் பெறவுள்ளது.

## பதிவுகளை உடன் செய்யவும்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையில் பொன் விழாவை முன்னிட்டு வடமராட்சி எல்லைக்குட்பட்ட சகல விளையாட்டு கழகங்களுக்குமான ஐந்து பேர் கொண்ட கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டி நகர சபையால் நடாத்தப்படவுள்ளது,

இப்போட்டிக்கான பதிவுகளை இம்மாதம் 9 ஆம் திகதிக்கு முன்பாக நகரசபை காரியாலயத்தில் மேற்கொள்ளுமாறு தலைவர் வ. விஜரட்ணம் கேட்டுள்ளார்.

## புதிய கட்டடத்தில் பாடசாலை

(இளவாலை)

பெரியவிளான் (றோ. க) தமிழ் கலவன் ஆரம்பப் பாடசாலை புதிய கட்டடத்தில் ஜனவரி மாத முதல் இயங்கவுள்ளது.

இப்பாடசாலையின் புதிய கட்டடத்தை யூ, என். எச். சீ. ஆர் 5 லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளது.

இப்பாடசாலைக்கு தற்காலிகமாக திருமதி பிஜென்வெனு அதிபராகப் பதவி வகிக்கின்றார்,

முதற்கட்டமாக ஆண்டு ஒன்று வகுப்பு ஆரம்பிக்கப் படவுள்ளதாக அப்பாடசாலையின் அதிபர் தெரிவித்தார்,

---

தென்னாபிரிக்காவின்

## இரவு விடுதிக்கு வெளியே குண்டுத் தாக்கு 7 பொலிசார் காயம்; பதற்றம் நீடிப்பு

(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவின் கேப்டவுனில் இரவுநேர விடுதியொன்றுக்கு வெளியே இடம் பெற்ற குண்டு வெடிப்பில் பொலிஸ் அதிகாரிகள் ஏழு பேர் காயமடைந்துள்ளனர் என்று தென்னாபிரிக்கப் பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்,

இரவுநேர விடுதியில் குண்டு வைக்கப்பட்டுள்ளதாகபொலிஸாருக்கு கிடைத்த தகவல் சுளையடுத்து பொலிஸ் அதிகாரிகள் அங்கே விரைந்த போது இனந்தெரியாத ஆயுதம் தாங்கிய நபர் ஒருவர் மேற்படி அதிகாரிகள் மீது கைக்குண்டுகளை வீசிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இத்தாக்குதல்களில் காயம் அடைந்த பொலிஸ் அதிகாரிகளில் இருவரின் நிலை கவலைக்கிடமாய் உள்ளது என்று கூறிய அதிகாரி மிலேனியக் கொண்டாட்டங்களுக்காக தென்னாபிரிக்காவிற்குச் செல்லும் உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கையை குறைக்கும் முகமாக மேற்படி தாக்குதல் மேற்கொள்ளப் பட்டிருக்கலாம் எனவும் மேலும் தெரிவித்துள்ளார்,

புத்தாயிரமாண்டில்

## பிலிப்பைன்ஸில் பட்டாசு வெடி 200 இற்கு மேற்பட்டோர் காயம்

புத்தாயிரமாம் ஆண்டை வரவேற்குமுகமாக பிலிப்பைன்ஸில் கொளுத்தப்பட்ட பட்டாசு வெடிகளினால் 200 இற்கும் அதிகமானோர் காயமடைந்தனர்.

தீய உணர்வுகளைக் களைவது என்ற மரபுப்படி சீன மக்கள் வழமையாக புத்தாண்டு தினத்தில் கொளுத்தும் பட்டாசுக்கள், துப்பாக்கி வேட்டுக்களால் பலர் காயமடைவதும், கொல்லப்படுவதும் வழமை.

இம்முறை இவ் விபத்துக்களின்போது 3 பேர் கொல்லப் பட்டுள்ளனர். இவர்களுள் 5 வயதுச் சிறுமிஒருவரும் அடங்குவர்.

[ந-7]

செச்செனிய தீவிரவாதிகளின்

## தாக்குதலைச் சமாளிக்க முடியாது ரஷ்ய இராணுவத்தினர் திணறல்

[குறொஸ்னி]

செச்செனியர்களின் அதி தீவிர தாக்குதலைச் சமாளிக்க முடியாத ரஷ்ய இராணுவத் தரப்பினர் சக்திமிக்க ஆயுதங்களை உபயோகிக்கப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குரொஸ்னியில் அண்மையில் இரு தரப்பினருக்கும் இடையில் இடம்பெற்ற பாரிய மோதல் சம்பவத்தில் செச்செனியர்களால் பல ரஷ்ய இராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன் ஆயுத தளபாட இழப்புக்களையும் பெருமளவில் சந்தித்ததைத் தொடர்ந்தே மேற்படி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாங்கள் இதுவரை பாவித்ததை விட அதிக அழிவைத் தரும் ஆயுதங்கள் எம்மிடம் உண்டு. அதனை குரொஸ்னியில் பிரயோகித்து செச்செனிய கிளர்ச்சியாளர்களை அழித்தொழிப்போம் என ரஷ்ய ஜெனரல் எனடொலி கொருனுகொவ் பகிரங்கமாகவே தெரிவித்துள்ளார்.

புத்தாண்டு வேளையில் சம்பவம்

# பாகிஸ்தானில் கோர பஸ் விபத்து 50பேர் உடல் கருகிபலி! 16பேர் காயம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் இஸ்லாமாபாத் நகருக்குக் கிழக்கே பயணிகள் பஸ் வண்டி ஒன்று தடம்புரண்டதில் ஏற்பட்ட பெருந்தீயினால் அதில் பயணம் செய்துகொண்டிருந்து 52பேர் தீயில்கருகி ஸ்தலத்திலேயே உயிரிழந்துள்ளதாகவும் 16பேர் காயங்களுக்கிலக்காகியுள்ளதாகவும் பாகிஸ்தானிய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அவ் அதிகாரி மேலும் தெரிவிக்கையில், இஸ்லாமாபாத்திலிருந்து 70 பயணிகளை ஏற்றிக்கொண்டு கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்த போது பஸ் வண்டியிலேயே இத்தீவிபத்து ஏற்பட்டதாகவும் இவர்களுள் பலர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

காயமடைந்தவர்களில் பலரது நிலைமிகவும் கவலைக்கிடமாக உள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் அறிவித்துள்ளன,

இந்த விபத்துக்கான காரணங்களை அறியும் பொருட்டு விசாரணைகள் துரிதகதியில் இடம் பெற்றுவருகின்ற போதிலும் விபத்திற்கான சரியான காரணம் இன்னும் அறியப்படவில்லை.

புத்தாண்டு பிறக்கும் வேளையிலே நடைபெற்ற இந்தக் கோர விபத்து நாடு முழுவதையும் சோகத்தில் ஆழ்த்தியிருப்பதாகவும் தெரிவித்துள்ள அந்த அதிகாரி விபத்து நடந்த பகுதியில் உள்ள வைத்தியசாலைகளில் அவசரகால நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாயும் மேலும் தெரிவித்துள்ளார்.

## பயங்கர வாதத்தை ஒழித்துக் கட்ட இந்தியா முழுமையாகப் பாடுபடும்

[புதுடில்லி]

புதிய நூற்றாண்டு முதல் பயங்கரவாதத்தை எதிர்த்து அதனை ஒழித்துக்கட்ட எல்லா நாடுகளுடனும் கைகோர்த்து உறுதியாகப் பணியாற்றும்.

இவ்வாறு இந்தியப் பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் தனது புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில் பயங்கரவாதத்தை உலகம் முழுவதும் ஒன்றுபட்டு நசுக்க வேண்டும் அத்தோடு பயங்கரவாதமென்ற கொடூரமான விடையத்தை முறியடிக்க இந்தியா தன்னாலான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும்.

[க-9]

## ஹெலிகொப்டரை கடத்திய இரு யுவதிகள் பொலிசாரால் கைது

சிறையில் இருக்கும் நண்பரை மீட்கும் பொருட்டு ஹெலிகொப்டரில் சென்று, இடையில் திட்டத்தைக் கைவிட்ட இரு பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனா.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது அமெரிக்க புளோரிடா மாநிலத்தில் உள்ள சிறையில் இருக்கும் நண்பரைக் காப்பாற்று முகமாக இரு பெண்கள் வாடகைக் ஹெலி கொப்டர் ஒன்றினை அமர்த்தி அதன் விமானியை துப்பாக்கி முனையில் சிறைச்சாலையை நோக்கி செலுத்துமாறு கட்டளையிட்டனர். ஆனால் சிறைச்சாலை -யை அண்மித்ததும் மனம் மாறிய மேற்படி பெண்கள் மீண்டும் விமான நிலையத்துக்கு விமானத்தை திருப்புமாறு கட்டளையிட்டனர்.

விமானி கொடுத்த தகவலின் பேரில் சம்மந்தப்பட்ட பெண்கள் இருவரும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர்.

## 100குழந்தைகளை கொலை செய்த கொலையாளி சரணடைந்தார்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் 100 குழந்தைகளைக் கொலை செய்த கொலையாளி பத்திரிகை அலுவலகம் ஒன்றில் சரணடைந்துள்ளான்.

38வயதான யாவித் இக்பால் என்பவனை மேற்படி கொலைகள் தொடர்பாக பாகிஸ்தான் அரசு தேடிவந்தமை குறிப்பிடத்தக்கது.

இவன் தான் கொலை செய்த 100 குழந்தைகளையும் அமிலத்தில் போட்டு விட்டதாக தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளான்

# அரசு - புலிகள் பேச்சுக்கான சூழலை உருவாக்க முயற்சிப்பேன்

## ஈ. பி. நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் போர்ச்சூழலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஜனாதிபதி சந்திரிக்காவிற்கும் இடையே பேச்சு வார்த்தையை நடத்துவதற்கான ஓர் சுமுகமான சூழலை உருவாக்க தாம் முயற்சி செய்வதாக கடமையின் போது காணாமற்போன படையினரின் உறவினர் சங்கத் தலைவர் ஈ.பி. நாணயக்கார தெரிவித்துள்ளார்.

அவர்மேலும் தெரிவிக்கையில், விடுதலைப் புலிகளின் தலைவருடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு வழி வகுக்கும் அமைப்பொன்றைத் தான் வரவேற்பதாக ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டுள்ளமையும் இங்கு அவதானிக்கத் தக்கது.

இதேவேளை வடக்கு கிழக்கு பகுதிகளில் இரு தரப்பினரும் மேற்கொண்டுவரும் ஷெல் மற்றும் மோட்டார் தாக்குதல்ளையும் விமானப் படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விமானக் குண்டுத் தாக்குதல்களையும் உடனடியாக நிறுத்துமாறும் இரு தரப்பினரையும் கோர உள்ளோம்.

காணாமல் போன படையினரின் தாய்மார் மனைவியர் சிலர் தனிப்பட்ட முறையில் விடுதலைப் புலிகளின் தலைவருக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் புலிகள் சில படையினரை விடுதலை செய்தமையை கருத்திற் கொண்டே அவர்கள் இவ்வாறான கடிதங்களை அனுப்பியுள்ளனர்.

எமது சங்கம் புத்தாயிரமாம் ஆண்டில் சமாதானத்திற்காக மேற்கொள்ள விருக்கும் புதிய நடைமுறைகள் பற்றியும் கலந்தாலோசித்து வருகின்றனர் எனக் குறிப்பிட்டார்கள்.

# வீடமைப்பிற்கென 80 இலட்சம் ரூபா இவ் வருடகடனாக வழங்கப்படும்

## தேசிய வீடமைப்பு அதிகார சபை

இலங்கை புராவும் வீடமைப்புக் கடனாக 80 இலட்சம் ரூபா வழங்கப்படவுள்ளதாக தேசிய வீடமைப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தப்பட்ட கூட்டம் ஒன்று வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இக் கூட்டத்தல் வீடமைப்புக் கடன்கள் வழங்க வேண்டிய அவசியம் பற்றி பலரும் வலியுறுத்திக் கூறியதுடன் மேற்படி கடன்களை துரிதமாக வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் வலியுறுத்தப்பட்டது.

வழமையை விட வீடமைப்பிற்கென கூடுதலான அளவில் கடன்கள் வழங்க இருப்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

### இனப்பிரச்சனை தீர்வு குறித்து

# சகல அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்த ஸ்ரீ.ல.மு. காங்கிரஸ் முயற்சி

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முகமாக சகல அரசியல் கட்சிகளையும் சந்தித்து பேச்சு நடத்துவதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மும்முரமாக ஈடுபட்டு வருவதாக தெரிவித்துள்ளன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்;

முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ரவூப்றக்கீம் எம்.பி தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட்டு இவ்விடையம் தொடர்பான சகல ஏற்பாடுகளையும் மேற்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் உள்ளிட்ட தமிழ்க்கட்சிகள் மற்றும் பெரும்பான்மை இனக் கட்சிகளை தனித்தனியாகச் சந்தித்து இனப்பிரச்சினைக்கான தீர்வின் அவசியம் குறித்து வலியுறுத்தப் போவதாகவும் அக்கட்சிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசியல் கட்சிகள் கொண்டுள்ள பிடிவாதப்போக்கினை கைவிட்டு தீர்வின் அவசியத்தை உணர்ந்து கொள்வதுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைக்கான சூழல் ஒன்றினை உருவாக்குவதற்கு அரசியல் கட்சிகள் தங்களாலான ஒத்துழைப்பை வழங்கவும் சகல கட்சிகளையும் ஒருமுகப்படுத்தி செயற்திட்டத்தில் இறங்க வைப்பதே தமது நோக்கம் எனவும் தெரிவித்துள்ளன.

# பயிர்கள் நாசம்

(பருத்தித்துறை)

மந்துவில் பகுதி வயல்களில் கதிர் வெளிவந்திருக்கும் நெற்பயிர்களை பன்றிகள் நாசம் செய்கின்றன.

இதனால் ஏற்படுகின்ற சேதத்தினைத் தடுக்கும்முகமாக விவசாயிகள் ஒன்று சேர்ந்து அப் பன்றிகளை வேட்டையாடி வருகின்றனர்.

இவ்வாறு வேட்டையாடப்பட்ட பன்றிகளின் இறைச்சி கிலோ நூறு ரூபாவிற்கு மேல் விற்பனை செய்யப்படுகின்றது.

# பாதுகாப்பு கட்டணம் குறைப்பு

(சில்லாலை)

மானிப்பாய்ப் பொதுச் சந்தையின் சைக்கிள் பாதுகாப்புக் கட்டணம் 2 ரூபா விலிருந்து ஒரு ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதுவரை .காலமும் அறவிடப்பட்ட பாதுகாப்புக் கட்டணமாகிய 2 ரூபா விற்கு மக்கள் தெரிவித்திருந்த எதிர்ப்பை அடுத்து சந்தைக் குத்தகைதாரர் இந்நடவடிக்கையை எடுத்துள்ளார்கள் [க-7[

# ஒளி விழா

(நெல்லியடி)

நெல்லியடி மெதடிஸ்த திருச் சபையால் அண்மையில் நடத்தப்பட்ட ஒளி விழா நிகழ்வு நெல்லியடிமெதடிஸ்த மிஷன்பாட சாலையில் திரு. யோ.ச. சத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வணக்கத்திற்குரிய முகாமைக்குரு வி. ஜே.மேதர் கலந்து கொண்டார்.

# வீதிதிருத்தம் இன்னும் இல்லை

(மந்திகை)

அல்வாய் முத்துமாரி அம்மன் கோயில், வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை உப அலுவலகம் ஆகியன அமைந்துள்ள பிரதான வீதி திருத்தப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறு மாதத்திற்கும் மேலாக கற்கள் பறிக்கப்பட்டுள்ள போதும் கூட இது வரையில் எவ்வித திருத்த வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ் வீதியின் வாய்க்கால்கள்புனரமைக்கப் படாமையால் மழை காலத்தின் போது வீதிக்கு மேலாக நீர் பாய்ந்து செல்வதனால் இவ் வீதியால் பயணம் செய்பவர்கள்பெரும் சிரமத்திற் குள்ளாகின்றனர்.

இவ் வீதியிலே உப தபாலகம், நூலகம், தனியார் மருத்துவமனை, பாடசாலை, ஆலயம் என்பன அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

### மட்டு, மாவட்டத்தில்

# 46இலட்சம் ரூபா செலவில் 96அபிவிருத்தி திட்டங்கள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலகப் பிரிவுகளில் இவ்வாண்டு 96 சமுர்த்தி சமுக அபிவிருத்தித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட சமுர்த்தி பிரதி ஆணையாளர் ஆர். நெடுஞ்செழியன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; 46 இலட்சம் ரூபாசெலவில் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன மேலதிகமாக மக்கள் பங்களிப்பினூடாக 10 இலட்சத்து 8970 ரூபாய் பெறப்பட்டுள்ளது.

இத்திட்டங்கள் அனைத்தும் இம்மாவட்டத்திலுள்ள இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது இம்மாவட்டத்தில் வாகரை பட்டிப்பளை வவுணதீவு போன்ற இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் அடுத்தாண்டு ,சமுர்த்தித்திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இதேவேளையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 12 பிரதேச செயலாளர்களில் 11 பேருக்கு எதிர்வரும் 3ம் திகதி முதல் இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது தொடர்ச்சியாக ஐந்து வருடங்கள் இம்மாவட்ட பிரதேச செயலகங்ளில் பணிபுரிந்த இவர்கள் மாவட்டத்திற்குள்ளேயே இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

வாகரை பிரதேச செயலாளர் எம்.பாலசுப்பிரமணியம் தவிரஏனைய 11பிரதேசசெயலாளர்களுக்கும் இந்த இடமாற்றக் கடிதங்கள் கிடைத்துள்ளதாக சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளர்கள் தெரிவித்தனர். (க)

### இரண்டாயிரம் ஆண்டுக்கென

# வல்லை நகரசபை 10 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்துள்ளது

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் 2000-ம் ஆண்டு வேலை திட்டங்கள் மேற்கொள்வதற்கென கடந்த மாதம் 9ஆம் திகதி நடைபெற்றபொதுக் கூட்ட தீர்மாத்தின்படி 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

சிதம்பராக்கல்லூரி 2½ இட்சம் ரூபா, வல்வை மகளிர் கல்லூரி 2½ 'இலட்சம் ரூபா மாவட்ட வைத்திய சாலைக்கு 1½ இலட்சம் ரூபா, கிராமிய முன்னேற்ற சங்கம் 1 லட்சம் ரூபா, வல்வெட்டித் துறை தீர்த்தக்கரை 2 இலட்சம் ரூபா, போசாக்கு சத்துணவு 50 ஆயிரம் ரூபாவும் இந்நடவடிக்கைகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (க - 11)

# இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதியில் மருத்துவ ஆய்வுகூட வசதிகள் இல்லை

இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாழும் 38 ஆயிரம் மக்கள் எந்தவிதமான வைத்திய வசதிகளுமின்றிபெரும்சிரமத்தை எதிர் நோக்கியுள்ளனர்.

மாந்தை மேற்கு, மடுபண்டி விரிச்சான், அடம்பன், தட்சணாமருதமடு, பள்ளமடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே மருந்துகள் இன்றி கஷ்டங்களை எதிர்நோக்கி உள்ளனர்.

இவ்விடங்களில் ஆஸ்பத்திரிகள் முற்றாக இயங்கவில்லை எனவும் வெள்ளாங்குளத்தில் ஒரு ஆஸ்பத்திரி இயங்கி வருவதாகவும், அங்கு மருந்துக்குத் தட்டுப்பாடு நிலவுவதாகவும் மன்னார் ஆயர் யோசப் இராயப்பு தெரிவித்தார்.

### இலங்கையில்

# சமாதானத்தை உருவாக்கும் நோக்கில் கையொப்பம் பெறும் இயக்கம் ஆரம்பம்

(கொழும்பு)

இலங்கையைத் தற்போது பீடித்திருக்கும் யுத்த கலாச்சாரத்தை ஒழித்து சமாதான கலாசாரத்தை ஏற்படுத்தும் நோக்கில் ஒரு கோடி கையொப்பங்கள் வாங்கும் இயக்கமொன்று புத்தாயிரமாம் ஆண்டு 2ம் திகதி கண்டியில் ஆரம்பிக்கப்படவுள்ளது

இக் கையெழுத்து இயக்கத்தை சமாதானத்துக்கும் ஜனநாயகத்துக்குமான மக்கள் கூட்டணி முன்னின்று நடாத்தவுள்ளது.

இவ் வறிக்கைகள் 2000ம் ஆண்டு செப்ரெம்பரில் இடம் பெறவிருக்கும்ஐ. நா. பொது சபைக் கூட்டத்தின் போது சமர்ப்பிக்கப் படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது.

# மருதங்கேணி கோட்ட ஆசிரியர்கள் போக்குவரத்தின்றி பெரும் சிரமம்

(செம்பியன் பற்று)

இன்று பாடசாலைகள் யாவும் முதலாந் தவணைக்காக ஆரம்பிக்கின்றன. மருதங்கேணிக் கல்விக்கோட்டத்திலுள்ள பாடசாலைகளிற்குப் பெரும்பகுதி ஆசிரியர்கள் பருத்தித்துறையும் அதை அண்டிய பிரதேசங்களில் இருந்தும் வருபவர்கள். இவர்கள் தமது சேவையை முழுமையாக வழங்க போக்குவரத்து தடையாக உள்ளது.

இதனால் மாணவர்கள் முழுமையான கல்வியைப் பெற முடியாமல் உள்ளது. பருத்தித்துறை டிப்போவிற்கு சொந்தமான இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்து தனது சேவையை பருத்தித்துறை முதல் நாகர் கோவில் வரையே நடத்துகின்றது.

மாமுனை, செம்பியன்பற்று, தாழையடி, மருதங்கேணி, உடுத்துறை, ஆழியவளை பிரதேசங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர், இது சம்பந்தமாக பருத்தித்துறை போக்குவரத்துச் சபைப் பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-42)

# உற்பத்தி கண்காட்சி

வடமராட்சி வலய முறைசாராக் கல்விப் பிரிவினால் நடாத்தப்பட்ட பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களின் உற்பத்திக் கண்காட்சி இம்மாதம் நடுப்பகுதியில் நடை பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

உடையமைத்தல், தலையலங்காரம், மனை முகாமைத்துவம் ஆகிய பயிற்சி நெறிகளை மேற் கொண்ட 150 மாணவர்களின் உற்பத்திப் பொருட்கள் இக் கண்காட்சியில் இடம் பெறும் என்று வடமராட்சி வலய முறைசாராக் கல்வி, பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு.பீ. வேணுகோபால் தெரிவித்துள்ளார். [க-52]

# பக்ஸ் சேவை

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை பொது மக்களுக்கான பக்ஸ் சேவைகளையும், போட்டோ பிரதி சேவைகளையும் ஆரம்பித்துள்ளது.

ஏற்கனவே பருத்தித்துறை நகரசபை பொதுமக்களுக்கான தொலைத் தொடர்பு சேவைகளையும் ஆரம்பித்திருந்தது. [க-52]

# திருட்டு முயற்சி தோல்வி

திருநெல்வேலி கலாமன்றசன சமூக நிலைய நூலகத்தில் 29 ஆம் திகதி இரவு நேரத்தில் கூரை பிரித்து இறங்க திருடர்கள் முயற்சி செய்த போது அயலவர்கள் விழித்துக் கொண்டதால் திருடர்களின் முயற்சி கைவிடப்பட்டது.

# கரணவாயில் உடைகள் கண்காட்சி

[கரணவாய்]

வடமராட்சி கல்வி வலய முறைசாராப்பிரிவினரால்கரணவாய் மகாவித்தியாலயத்தில் நடந்து வந்த உடையமைத்தல் பயிற்சி நெறியில் பங்கு பற்றிய மாணவர்களால் உருவாக்கப்பட்ட உடைகள் கண்காட்சி ஒன்று அண்மையில் இடம் பெற்றது.

பாடசாலை அதிபர் செ. சதானந்தம் தலைமையில் இடம் பெற்ற இவ் வைபவத்தில் கரவெட்டி பிரதேச செயலர் செ. ஸ்ரீநிவாசன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். [க-27[

# புத்தாண்டுப் பலன் - 3

## சிங்கம்

மகம், மூலம், உத்தரம், 1ம் பாதம் வரையுள்ள நட்சத்திரங்களில் பிறந்தவர்களுக்கும், மா, மீ, மூ, மே, மோ, டா, டி, டு, டே என்னும் பெயர் முதல் எழுத்துக்கள் கொண்டவர்களுக்கும் இது பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் ஐந்தாவதுராசியாக அமைந்துள்ளது சிங்கம் மிருகங்களில் உயர்ந்தது சிங்கம்போல இந்த இராசிக்காரர்களும் உயர்ந்தவர்களாகக் காணப்படுகின்றார்கள். இவர்கள் தம்காரியங்களைச்சுயநலத்தோடும்கௌரவமாகவும் நிறைவு செய்து கொள்கிறார்கள். இவர்கள் பெருந்தன்மையும் மிடுக்கும் மிக்கவர்கள். புகழோடு வாழவும் பெரிய செயல்களைச் செய்யவும் இவர்களால் முடியும். இவர்களது செயற்பாடுகள் பிறரைக்கவருவதாக அமைந்திருக்கும். இவர்கள் தம்மைவிரும்புபவர்களை எளிதில் வசமாக்கிவிடுவார்கள். மிகவும்தைரியசாலியாகதிகழ்வதைவிடசாமர்த்திசாலியாக இருப்பதையே விரும்புபவர்களாக இருப்பார்கள். அஞ்சாத நெஞ்சத்துணிவும், நிர்வாகத்திறமையும் கண்டிப்பும் ஆழ்ந்த ஞாபகசக்தியும் மிகுந்தவர்கள். பிறரை மயக்கி தமது காரியத்தைச் சாதிக்கக் கூடியவர்கள். ஏமாற்றுபவர்களைக் கண்டால் பொல்லாத கோபம் கொள்வார்கள். தொழில் விஷயத்தில் சிறிதளவேனும் பிழை செய்யாதமனம் இவர்களிடமுண்டு. இவர்கள் மிக நல்ல நண்பர்களைவிட மிகக்கொடுமையான வியாபாரிகள் என்பது பொருத்தமானது. எதிரிகளை அலட்சியமாகக் கருதுபவர்கள். இவர்கள் நர்மம் அதர்மம் என கருதாமல்காரியமே கண்ணாயிருப்பார்கள். ஆன்மீகத்தை நேசிப்பவர்கள் இவர் அழகு அறிவு, குணசீலமிக்க பெண்களையே காதலித்து மணம்முடிக்க விரும்புவார்கள். பெண்களாயின் புத்திக்கூர்மையிலும் நிர்வாகத்துறையிலும் சிறந்து விளங்கி ஆண்களையும் ஆதிக்கம் செய்யக்கூடியவர்கள். பதற்றம் நிறைந்தவர்கள். கல்வி, கலைத்திறமை, பேச்சுத்திறமை, நவநாகரீக பற்றுமுடை ஆண்மை கொண்ட இளைஞர்களிடத்தில் காதல் கொள்ளக்கூடியவர்கள். தமது கொள்கைகளை நிலைநிறுத்துவதில் வல்லவர்களாக சிங்கராசிப் பெண்கள் சண்டை சச்சரவுக்கு அஞ்சாதவர்கள். குற்றம் செய்பவர்களை கண்டால் போர்க்கொடி எழுப்புவதிலும் வல்லவர்கள். காதலின் வேகத்தையும் உணர்ச்சிகளைக் காட்டும் இளைஞர்களை வெறுப்பவர்களும் இவர்கள்தான் இந்த இராசியினர் தொழில் செய்யவும் குடும்ப துணைவர்களைத் தேர்ந்தெடுக்கவும். மேடம்' இடபம், மிதுனம், கன்னி, தனுசு இராசியினைதேர்ந்தெடுப்பது அதிஸ்டமானது. இவர்கள் இராசியதிபதி சூரியன்; அதிஷ்டநிறம் ஓரஞ்சு அதிஷ்டரத்தினம் மாணிக்கம். அதிஸ்ட எண்கள் 1, 5, 10 அதிஸ்டதிசை கிழக்கு.

இவ்ராசியினருக்கு இவ்வாண்டு முக்கிய கிரகமான சனி, வியாழன், ஒன்பதாம் வீட்டில் இருந்து பத்தாம் வீட்டுக்கு இடம் பெயர்கின்றார். இராகு கேது இடம் பெயர்வு சற்று நிம்மதியைத் தரும். பெரும் அளவான இழப்புக்களை தடுத்து நிறுத்தும் யோகம் அமையவுள்ளது. வியாழன் கும்பம், யோகம் சத்துரு ஸ்தானங்களைப் பார்ப்பது நீண்டகால அவஸ்தைக்கு பரிகாரமாகவுள்ளது. செய்தொழிலில் உயர்வு தென்படும் பணப்புழக்கம் சகஜமாக இருக்கும். உறவினர் பகை அகலும், வீடு நிலம் வாங்குவதற்கான வாய்ப்பு உருவாகும். குடும்பத்தில் அமைதி நிலவும், திருமணமாகாதவர்கள் திருமண யோகத்தைப்பெறுவர். பெண்களுக்கு தொழில் வாய்ப்புக்களும், தொழிலில் இடமாற்றம், பதவி உயர்வு கிட்டும் வங்கிக் கடன் முயற்சிகள் அனுகூலமாகும். மாணவர் கல்வியில் கரிசனைகாட்டுவர். நல்ல பெறுபேறுகள் கிட்டும். உடல் நிலை ஆரோக்கியமானதாய் இருக்கும். வெளிநாட்டுப்பயணங்களுக்கு அனுகூலம் காணப்படுகின்றது. அதிஸ்டமுண்டு.

## கன்னி

உத்தரம், 2ம் பாதம்; அத்தம் சித்திரை 2ம் பாதம் வரையுள்ள நட்சத்திரத்தில் பிறந்தவர்களும் ட, டோ, மா, பி, யு, ஷ, ண பெ, பொ, என்றும் எழுத்துக்களைக் கொண்ட பெயர் அமைந்தவர்களுக்கும் இந்தப் பலன் பொருந்தும்.

இராசிச்சக்கரத்தில் ஆறாவது ராசி கன்னி ராசி, இவ் ராசி முன்யோசனை கிடையாது. பொய்பேச விரும்ப மாட்டார்கள். சிக்கனமானவர்கள், நல்ல திறமைமிக்கவர்கள். சாந்தமும் அமைதியுமுடையவர்கள் கடன் வாங்குவதற்கும், கடன் கொடுப்பதற்கும் ஆயிரம் யோசனையுடையவர்கள். கோபம் வந்தால் உணர்ச்சி வசப்படுபவர்கள். சொந்த வாழ்க்கையை ஊடுருவிப் பார்ப்பார்கள். எப்பொழுதும் நம்பிக்கைக்குரியவர்களையும், தனக்குத் தொல்லை தராதவர்களையும் உதவக்கூடியவர்களையும் துணையாகவோ நண்பர்களாகவோ தேர்த்தெடுப்பார்கள். தந்திரமிக்கவர்களாக இருப்பதால் மன ஆழத்தைப் புரிந்து கொள்வதில் கஸ்டமாக இருக்கும். மற்றவர்கள் தீங்கு செய்தால் பழிவாங்கும் வரையில் ஓயாமல் சிந்திக்கக் கூடியவர்கள். பிறர் தம்மை முகமன் கூறுவதை விரும்பமாட்டார்கள். நாளை நடப்பதை முன்கூட்டியே உணரக்கூடியவர்கள். இவர்களிடம் எதையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் இருக்குமே தவிர கற்றுத் தேர்வதில் ஆர்வம் இருக்காது. பெண்களாயின் இயற்கையிலே இனிமையாகப் பேசும் குணமிருக்கும். எப்போதும் இளமையுள்ளவர்களாக கற்பனை செய்பவர்களும் கன்னிராசிப் பெண்கள் தான். இப்பெண்கள் எப்போதும் புகுந்த வீட்டில் தான் அதிஸ்டத்தைக் காண்பார்கள். கணவரின் குணமறிந்து பணிவிடை செய்வதில் வல்லவர்கள் இவர்களைத் தர்க்கம் செய்து வெல்வது கடினம், இவர்களது மன இயல்புகள் உணர்ச்சிமயமானது. தமக்காகத் தியாகம் செய்யும் ஆண்களையே நேசிப்பவர்கள் சமயப் பற்றும் சபலபுத்தியுமிக்க இவர்களை எவரும் ஏமாற்ற முடியாது. இவர்கள் எந்த வித தீமையையும் உடனுக்குடன் மறந்து விடுவார்கள். தோல்விகளைத் தாங்கிக் கொள்ள முடியாதவர்கள் இவர்களிடம் வாங்கிய கடனைக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் இருப்பது அரிதாக இருக்கும். இவர்கள் எப்போதும் பிறந்த இடத்தை விட்டு அயலிடத்தில் சென்று வாழ்வது சரியாகவுள்ளது.

இவ்ராசியின் அதிபதி புதன் அதிஸ்டநிறம் கிளிப்பச்சை அதிஸ்டக்கல் மரகதம் அதிஸ்டஎண்கள்4, 6, 9, அதிஸ்டவாசல் வடக்கு தெற்கு இவ்ராசியாளர் தொழில் பங்காளர்களாயோ குடும்ப துணைவரைத் தேர்ந்தெடுக்கும் போது மேலும் மிதுனம், சிங்கம், துலாம், தனுசு, மகர ராசியாளரைத் தேர்ந்தெடுத்தால் யோகமானது.

இவ்ராசியினருக்கு இவ்வாண்டில் அட்டமத்தில் இருந்து சனி, வியாழன் ஒன்பதாம் வீட்டுக்கு இடம் பெயர்வது சற்றுநிம்மதி, இராகு கேது மாற்றமும் சுமாரான பலன்களைத் தரும் பெரும் அனர்த்தங்களில் இருந்து விடுபடுவதற்கான யோகமான ஆண்டு செய்தொழிலில் நஷ்டம்இருக்காது லாபம் குறைவாக இருக்கும் கடன்சுமைகள் கட்டுக்கடங்கும் அரசாங்க தொழில் துறையாளர் இடமாற்றமுண்டு, பதவி உயர்வு தாமதமாகும் தொழில் அற்றோர் தொடர்ந்தும் பாதிப்படைவர் திருமண யோகம் தாமதமாகும் குடும்பபிணக்குகள் தொடர்ந்து இழுபறி நிலையில் இருக்கும் உறைவினர் பகமையுண்டு மாணவர்கள் தான் தோன்றித்தனமாக நடப்பர் தேர்வுகளில் மந்த நிலை இருக்கும் பெண்களுக்கு வேலைப்பழு அதிகரிக்கும் மணவாழ்வு சுமையாக இருக்கும் விவசாயிகளுக்கு போதிய பலாபலன் கிட்டாது மனதைத் திடப்படுத்தும் காலமாகும்.

**- ஜோஸ்யர் அனுஷியா -**

---

## நற்றமிழ் முழங்கும் 'வலம்புரி'

நாளும் பொழுதும் நற்றமிழ் முழங்கும்
நல்லநண்பன் வலம்புரியே!
நமதில்லங்களில் பெருவரவேற்பும்
வாழ்த்தும் உவந் தளிப்போம்
ஆளும் பேருமாகப் படித்தின்
புறுவோம் ஆடிப்பாடி
அடுத்தவர்க்கும் அறிமுகஞ் செய்
வோம் அன்பரே வாரீர்!

அறிவுச் சுடரை ஏற்றிவைக்கும்
பணியாளன்! அறிஞர்தம்
ஆசி பெற்று வாசகரைத்
தன்பக்கம் ஈர்த்துக் கொண்டு
நெறிபிறழாது பத்திரிகைத்
தருமம் பேணும் நெடுங்கனவான்!
நற்பெயரீட்டி நாடு சிறக்க
நல்வழி காட்டும் நல்லாசான்!

சமத்துவம் சகோ தரத்துவம் இணையன
பேணல் இலட்சியமாம்!
சுடச்சுடச் செய்தி தருவதில்
முந்நிற்கும் சமூகத்தொண்டன்!
கமத்தொழில் பெருகவும் வணிகமொடு
கைத்தொழில் ஏற்றமுறவும்
கைகொடுக்கும் ஆலோசகன்
கண்ணியம்மிக்க தேசாபிமானி!

முத்தமிழ்க் கலைகள் தமை
மேன்மை யெய்த வைப்பனென்று
முரசறைந்து செப்பும் மொழி
மதுரமான நற்சேதியன்றோ
பத்தும் பலதுடன் பாகான கவி
கதை கட்டுரை காவியம்
பைந்தமிழிற் படைத்தளிக்க
முன்வந்த பண்டிதன் 'வலம்புரி'

**- மோ. ஷாந்தன் சத்தியகீர்த்தி**

---

# ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று சகலரும் ஒத்துழைக்க வேண்டும்

**- ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி**

(யாழ்ப்பாணம்)

அனைத்து தமிழ் தரப்புகளும் தங்களது கசப்பான பழைய முரண்பாடுகளை மறந்து, மன்னித்து ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையை கடைப்பிடித்து ஒருமித்த செயற்பாட்டுடன் அரசுக்கு அழுத்தம் கொடுத்து, எமது நியாயத்தை வலியுறுத்துவதுடன் எமது இனத்தின் அழிவை தடுப்பதுடன் எமது சுய நிர்ணய உரிமையை பெற்றெடுக்க ஜனாதிபதியின் பேச்சுவார்த்தைக்கான அழைப்பை சகலதரப்பினரும் பயன்படுத்த வேண்டும்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி விடுத்துள்ள செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கையில்;

இந்த நாட்டை காலங்காலமாக ஆண்டுவந்த பேரினவாதிகள் தமது குறுகிய அரசியல் லாபங்களுக்காக இனவாதத்தை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் தங்களின் ஆட்சியை தக்கவைத்துக் கொண்டு வந்தது உலகம் அறிந்த உண்மை.

இந்த நிலையில் சிங்கள அரசியல். தலைவர்களிலே ஒரு வித்தியாசமானதாகவும். தமிழ் மக்களின் பிரச்சனைக்கு ஒற்றையாட்சிக்கு அப்பாற்பட்ட முறையில் ஒரு அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களுக்கு வழங்குவதன் மூலம் புரையோடிப்போயிருக்கும் இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை மூலம் ஒரு அரசியல் தீர்வைக் காண முனைந்துள்ள ஜனாதிபதியின் அழைப்பை விடுதலைப் புலிகள் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதுடன் 17 வருட காலமாக இம் மண்ணில் நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டத்தினால் சாதகமானவற்றைவிட பாதகமானவையே அதிகரித்து வருவதை நாம் தற்பொழுது காணக்கூடியதாக உள்ளது.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலத்தில் 35 இலட்சமாக இருந்த வடகிழக்கு வாழ் தமிழினம் இன்று 12 இலட்சம் அளவிற்கு வந்துள்ளது. இன் நிலையில் தொடரும்ஆயுதப்போராட்டத்தினால் தமிழ் பேசும் மக்கள் நாளாந்தம் புலம் பெயர்ந்து வட-கிழக்கிற்கு வெளியேயும் இந்தியாவிற்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்றுகொண்டிருக்கின்றனர். அத்துடன் இந் நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான இளைஞர் சமுதாயம் அழிவுக்குள்ளாவதுடன் எஞ்சியுள்ளோரும் ஒரு விரக்தியான வாழ்க்கையையே நடாத்தி வருகின்றனர்.

இதனால் நாளடைவில் பலர் மன நோய்க்கு உள்ளாகின்றனர். யாழ். மருத்துவமனை உளநல சிகிச்சைப்பிரிவின் தகவல்களின் படி 90-ம் ஆண்டிற்குப் பின்பு மன நோயாளர் தொகை அதிகரிப்பு போன்றவற்றையும் கருத்தில் கொள்வதுடன் உரிமைப்போராட்டத்தில் குறிப்பாக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் ஒரு இனம் தனது இடத்தில் அமைவிடம் அகப்புறச் சூழல் நிலைமைகளைக் கருத்தில் கொள்வதுடன் ஆயுதப் போராட்டம் நீண்டு செல்வதனால்ஏற்படும் பாதக நிலைமைகளையும் கருத்தில் கொள்ள வேண்டும். (க)

பெண்ணிற் பெருந்தக்க யாவுளகற்பெனும்
திண்மை உண்டாகப் பெறின்.

- குறள்

வலம்புரி

## பெண்ணியம் தழைப்பதெப்போ

பெண் என்றால் பெருமை என்றான் திரு. வி. க. பெண்ணிற் பெருந்தக்க யாவுள என்றான் வள்ளுவன் இவை செவிடன் காதில் ஊதிய சங்கு போல பயனற்றவையாகி விட்டன. ஏட்டுச்சுரைக் காய்கறிக்குதவாது என்ற நிலைதான்.

இந்த அவலம் நிறைந்த மண்ணில் பெண்கள் கற்பை விலை கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை எதிர்காலத்தில் வைத்திய நிபுணராய் பரிமணித்திருக்கக் கூடிய கிரிசாந்தி குமாரசாமி சீருடையினரின் மிருக உணர்வுக்குத் தன்னை இழந்த தன் இன்னுயிரையிழந்தாள் தன்தாய், தம்பி, சுற்றம் என பட்டியல் அன்று நீண்டது. மணவினையின் வாயிலில் நின்ற அப்பாவிப் பெண் ராஜினி வேலாயுதபிள்ளை இன்னுமோர் மிருக உணர்வின் பலிக்கடா. அம்பாறை கோணேஸ்வரி மன்னார் பள்ளிமுனை கமலிட்டா மட்டக்குழியில் றீட்டா யோன் என எழுதா விதியின் பட்டியல் நீளும்.

அண்மையில் தன்னையிழந்த தனியன் சாரதாம் பாள் குரூரமாகக் கொலை செய்யப்பட்டாள் இவ்வாறு பட்டியல் நீள்வதற்கு பெண்கள் செய்த குற்றம் தான் என்ன. வாழ்வின் சுதந்திரம் பெண்களுக்கு இல்லையா? சுதந்திரம் பிறப்புரிமை என்று பீற்றுகிறார்களே அர்த்தமற்ற பெட்டைக் கேரல்களா அவை.

சமூகத்திலும் இங்கொன்று அங்கொன்றாக இவ்வாறான அவல நிலைகள் பெண்களைத்துரத்துகின்றன அவர்களது உறுதிப் பாடான வாழ்விற்கு உரித்தான வாழ்விற்கு ஊறு வருவதைத் தடை செய்வதெப்போ?எப்படி? கள்வன் தானாகத்திருந்தாவிடில் திருட்டை ஒழிக்க முடியாது.

அவலமாகச் சாகடிக்கப்படும்அபலைகள்போல் சம்பந்தப்பட்டோர் சட்டத்தின் முன் பாரபட்சமின்றி நிறுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும். கயவர்களை மிருக உணர்வின் பேதைகளை கொலைக்கழுவில் ஏற்றாதா பெண்கள் தம் அவல ஒலி.

மண்ணின் விடிவிற்கு இயற்கையில் ஐம்பது வீதமான பெண்குலம் ஸ்த்திரமடைய வேண்டும். அவர்கள் சுதந்திர பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும். அத்தனைக்கும் மண் விழிப்படைய வேண்டும்.

-அன்புடன் ஆசிரியர்

## சிறுவர் நூலக திறப்புவிழா

[புலோலி]

பருத்தித்துறை நகரசபை பொது நூலக பொன் விழாவும் சிறுவர் நூலகத் திறப்பு விழாவும் இம் மாத இறுதியில் நடைபெறுமென பருத்தித்துறை நகர சபைத் தலைவர் திரு.வி. விஜயரட்ணம் தெரிவித்தார்.

அத்துடன் 30 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வரும் நவீன மீன் சந்தை நிர்மாண வேலைகளும் பூர்த்தியடையும் நிலையில் உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். [52[

## நூலக உதவியாளர் ஓய்வு

[புலோலி]

கரவெட்டிப் பிரதேசசபை நெல்லியடி பொது நூலகத்தில் சுமார் 30 வருடங்களாக நூலக உதவியாளராகக் கடமையாற்றிய திரு.ஆ. அம்பலவாணர் சேவையிலிருந்து இளைப்பாறியுள்ளார்.

இதேவேளையில் கரவெட்டி பிரதேசசபை உடுப்பிட்டி பொது நூலகத்தில் பணியாற்றிய நூலக உதவியாளர் திரு. எஸ். தெய்வேந்திரன் நெல்லியடி பொது நூலகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டிருக்கிறார். [52]

## இலங்கையில் கடந்த பத்துமாதத்தில் மட்டும் 41,381 வாகன விபத்துக்கள் இடம்பெற்றன

(கொழும்பு)

இலங்கையில் ஆண்டுக்கு ஆண்டு விபத்துக்களும் அதனால் ஏற்படும்இழப்புக்களும் அதிகரித்து வருவதாக பொலிஸ் தலைமையக போக்கு வரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

சென்ற ஆண்டில் முதல் 10 மாதங்களில் மட்டும் 41,381 வாகன விபத்துக்களும் அதனால் 1,629 மரணங்களும் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த அவர் அதற்கான காரணங்களையும் சுட்டிக் காட்டியுள்ளார்.

கவனக்குறைவாக வாகனம் செலுத்துதல், வீதி சமிக்ஞைகளை மதிக்காமல் வாகனம் செலுததுதல், முறையான பயிற்சி இன்மை, மது போதையில் வாகனம் செலுத்துதல் இவை காரணமாகவேபெரும்பான்மையான விபத்துக்கள் ஏற்படுவதாக தெரிவித்துள்ளார்.

(க-9g)

## நற்கருணை வழிபாடு

பாண்டியன் தாழ்வு அன்னாள் ஆலயத்தில் 99 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இடம்பெற்ற செயற்பாடுகளை நினைவுகூரும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது.

இளைஞர் சங்கத்தின் ஆதரவில் பங்குத் தந்தை அருட்திரு, ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் நன்றித் திருப்பலியும் நற்கருணை ஆராதனையும் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## வீதி திருத்தம்

வல்வெட்டித்துறை நகர சபை எல்லைக்குட்பட்ட சுமார் அரை கிலோ மீற்றர் நீளமுள்ள மாதங்கரை சமந்தனை வீதி 3 இலட்சம் ரூபா செலவில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நகரசபையின் ஈ,பி,டி,பி உறுப்பினர் ப. தியாகராசாவின் சிபார்சின் மூலம் இந்த நிதி ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## வை 2 கே பிரச்சனையால் பாதிப்பு எதுவும் ஏற்படப் போவதில்லை

(கொழும்பு)

உலக நாடுகள் அனைத்திலும் பரபரப்பாக எதிர்பார்க்கப்படும் வை.ரு.கே. பிரச்சனை காரணமாகஸ்தம்பித்து விடும் என எதிர்பார்க்கப்பட்ட துறைகள் எதிலும் இதுவரை எந்தத் தடங்கல்களும் ஏற்பட வில்லை எனச் சர்வதேச ரீதியில் இப்பிரச்சனையைக் கண்காணித்து வந்த அமைப்புத் தெரிவித்துள்ளது,

குறிப்பாக விமானப் போக்குவரத்து, தகவல் பரிமாற்றம் போன்ற சில முக்கிய துறைகளின் செயற்பாடுகளை உலகளாவிய ரீதியில் அவ்வவ்துறைகளைச் சார்ந்தவர்களுடன் இவ் அமைப்புத் தொடர்புகளை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொண்டிருந்த போதிலும் இத் துறைகளில் எந்தஸ்தம்பிதமும் ஏற்படாது சுமுகமாக செயற்பட்டன என அவ் அமைப்பின் அதிகாரி ஒருவர்தெரிவித்துள்ளார். (க-7)

## தரம் 10 கணித பாடத்திட்டம் (2000)

| தொனிப் பொருள் | படிமுறை இலக்கம் | தலைப்பு | பாடவேளை |
|---|---|---|---|
| எண் | 01 | நிறை எண் | 04 |
| அளவீடு | 02 | சுற்றளவு | 04 |
| அட்சரகணிதம் | 03 | காரணிகள் | 06 |
| எண் | 04 | பின்னங்களும் தசமங்களும் | 05 |
| அளவீடு | 05 | பரப்பளவு | 06 |
| கேத்திரகணிதம் | 06 | கோடுகளும் கோணங்களும் | 06 |
| அட்சரகணிதம் | 07 | அ.க.கோவைகளின் பொ.ம.சி. | 03 |
| எண் | 08 | விகிதமும் விகிதசமமும் | 04 |
| எண் | 09 | சுட்டிகளும் மடங்குகளும் 1 | 05 |
| அட்சரகணிதம் | 10 | அட். கணி. பின்னம் | 04 |
| எண் | 11 | சதவீதம் | 06 |
| கேத்திரகணிதம் | 12 | முக்கோணி 1 | 04 |
| அட்சரகணிதம் | 13 | சமன்பாடு | 07 |
| அட்சரகணிதம் | 14 | சூத்திரம் | 04 |
| எண் | 15 | எளியவட்டி | 04 |
| எண் | 16 | சுட்டிகளும் மடங்குகளும் 11 | 05 |
| கேத்திரகணிதம் | 17 | பல்கோணிகள் | 07 |
| புள்ளிவிபரவியல் | 18 | தரவு விளக்கம் | 06 |
| அளவீடு | 19 | கனவளவு | 06 |
| அட்சரகணிதம் | 20 | இருபடிச்சமன்பாடு | 05 |
| அளவீடு | 21 | காலம் | 04 |
| கேத்திரகணிதம் | 22 | முக்கோணி 11 | 06 |
| புள்ளிவிபரவியல் | 23 | வகைக் குறிப்புப் பின்னம் | 06 |
| அட்சரகணிதம் | 24 | சமனிலிகள் | 04 |
| எண் | 25 | கூட்டற்தொடர் | 08 |
| கேத்திரகணிதம் | 26 | இணைகரம் | 08 |
| நிகழ்தகவு | 27 | தொடைகள் | 07 |
| அட்சரகணிதம் | 28 | நேர்கோட்டு வரைபு | 04 |
| நிகழ்தகவு | 29 | நிகழ்தகவு | 07 |
| கேத்திரகணிதம் | 30 | வட்ட நாண் | 07 |
| எண் | 31 | எண் அடி | 03 |
| கேத்திரகணிதம் | 32 | அமைப்பு | 06 |
| அட்சரகணிதம் | 33 | வரைபு | 07 |
| புள்ளிவிபரவியல் | 34 | கூட்டமாக்கப்பட்ட தரவு | 06 |
| அளவீடு | 35 | அளவிடைப்படம் | 04 |
| கேத்திரகணிதம் | 36 | வட்டகோணம் | 03 |
| எண் | 37 | வெளிநாட்டுப்பணம் | 03 |

## தரம் 10 கணித பாடத்திட்ட விரிவாக்கம் (சில பகுதிகள் மட்டும்)

| பாட விடயம் | குறிப்பு |
|---|---|
| 1. 0. எண்கள் | |
| 1. 1. நிறை எண் | நிறை எண்களை அறிதல். நிறை எண்களின் பாவிப்பு. |
| 1. 2. பின்னம் | 5 பின்னங்களுக்கு மேற்படாத கோவை ஒன்றைச் சுருக்குதல்/ பின்னப் பாவிப்பு. |
| 1. 3. தசமம் | 4 தசமதானங்களுக்கு மேற்படாத எண்களைக் கொண்ட கோவைகளைச் சுருக்குதல். முடிவில் தசமம் (மீளும் தசமம் உட்பட) தசம எண்களின் பாவிப்பு |
| 1. 4. விகிதமும் விகித சமமும் | விகிதமும் விகிதசமத்தினதும் பாவிப்பு (கலவைகள், சனத் தொகை போன்றன) |
| 1. 5. சதவீதம் | இலாபம், நட்டம், கழிவு, தரகு, தவணை, வரி, வாடகை. |
| 1. 6. எளிய வட்டி | வட்டி கொடுப்பனவுகள் |
| 1. 7. எண் அடி | துவித எண்களை அறிதல், அவற்றை தசம எண்களாக மாற்றல், தசம எண்களை துவித எண்களாக மாற்றல், துவித எண்களை கூட்டல், கழித்தல். |
| 1. 8. சுட்டிகளும் மடங்குகளும் | நிறை எண்களுடனான செய்கைகள் மடக்கைகள் சுட்டிகளூடாக பத்தின் அடிக்கு மடக்கை. மடக்கை அட்டவணையின் உதவியுடன் 1 இலும் பெரிய இரண்டு எண்களின் பெருக்கல், வகுத்தல் கணிகருவியின் உதவியுடன் பெற்ற விடைகளை சரி பிழை பார்த்தல். |
| 2. 0. அளவீடு | |
| 2. 1. நீளம் (சுற்றளவு) | எளிய நேர்கோட்டு தள உருவங்களின் (மூடிய) சுற்றளவைக் காணலும் பிரயோகம் வட்டத்துடன் தொடர்பு பட்ட பிரச்சினைகள் நேர்கோட்டு கனவுருவங்களின் பரப்பளவை காணலும், பிரயோகம் ஏயர், ஹெக்ரெயர் கனவுரு, சதுரமுகி அரியம் மேற்பரப்பளவு. |
| 2. 2. பரப்பளவு | வட்டப் பரப்பளவும் அதன் பிரயோகம் உருளையின் மேற்பரப்பளவும் அதன் பிரயோகம். |
| 3. 0. அட்சரகணிதம் | |
| 3. 1. அட்சரகணித கோவைகளின் பொ. ம. சி. | இரண்டு மாறிகளுக்கு மேற்படாமல் இரண்டாம் அடுக்கு வரை. |
| 3. 2. அட்சரகணித பின்னங்கள் | பகுதி எண் காரணிப்படுத்தப்பட்ட அ. க. பி. சுருக்கம். பொதுக் காரணி மூலம். |
| 3. 3. அட்சரகணித கோவைகளின் காரணி | இரு வர்க்கங்களின் வித்தியாசமாக ax2சகbxசகc என்ற வடிவில் இருபடிக் கோவை (இங்கு aபூச்சியமன்று b2-4ac பூரண வர்க்கமாக) |
| 4. 0. கேத்திரகணிதம் | |
| 4. 1. கோடும் கோணமும் | உய்த்தறிதல் உட்பட ஒத்த கோணங்கள், ஒன்றுவிட்ட கோணங்கள், நேயக்கோணங்கள் குத்தெதிர் கோணங்கள் கொண்ட பிரச்சினைகள். |
| 4. 2. முக்கோணிகள் | முக்கோணிகளின் ஒருங்கிசைவும் அவற்றைக் கொண்டு உய்த்தறிதல்களும். முக்கோணிகள் தொடர்பான உய்த்தறிதல்கள் சம, இருசம, சமனில் பக்க முக்கோணிகள் தொடர்பான உய்த்தறிதல். |

# குண்டு அனர்த்தங்கள் மத்தியிலும் தமிழரை எனது அரசு பாதுகாத்தது

## ஜனாதிபதி தெரிவிப்பு

(இலண்டன்)

இலங்கையில் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக கொழும்பில் குண்டுவெடிப்பு அனர்த்தங்கள் ஏற்பட்ட போதும் கூட தமிழ் சிங்கள மக்கள் பாதிப்புறாது அவர்களைப் பாதுகாப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எமது அரசு மேற்கொண்டது.

ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கா பி.பி. ஸிக்கு வழங்கிய பேட்டியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவிக்கையில், முன்னைய அரசாங்கத்தைப் போல் அல்லாமல் எமது ஆட்சிக்காலத்தில் எந்த ஒரு தமிழ் பிரஜையும் துன்புற நாம் இடமளிக்கவில்லை அவர்களுக்கு சகலபாதுகாப்புக்களையும் வழங்க அரசு கடமைப்பட்டுள்ளது.

எமது அரசு கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்காக அளப்பரிய சேவையை ஆற்றியுள்ளது. எனவே தமிழ்மக்கள் உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும்.

வழமைபோல எனது கடமைகளில் நான் ஈடுபடலாம் என மருத்துவர்கள் தெரிவித்தார்கள் என்றும் ஒரு கண்ணின் பார்வை மாத்திரம் இல்லாமல் போகலாம் இறைவனின் அருளால் உயிர் தப்பினேன் எப்படித் தம்பினேன் என்பது எனக்கே ஆச்சரியமாக உள்ளது.

என்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்து எத்தகைய அச்சமும் பயமும் ஏற்படாமல் இருப்பதையிட்டு எனக்கே ஆச்சரியமாக உள்ளது, நான் எதற்கும் பயப்படுபவ அல்ல என்பதை ஏற்கனவே கூறியுளேன்.

எனினும் முன்பின் யோசிக்காமல் ஆபத்துக்களை எதிர் நோக்க விரும்பமாட்டேன்.

இத்தகைய தாக்குதல் ஒன்றை எதிர்நோக்கி அதன் பயங்கரத்தை எடுத்துக் கூறுவதற்கு உயிர்தப்பித்த தமிழ், சிங்கள மற்றும் வெளிநாட்டு தலைவர் ஒருவர் இருப்பதாக இருந்தால் அது நான் மாத்திரம், தான் இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தி கூட தாக்குதலில் கொல்லப்பட்டார்.

இதனால் தமிழ் மக்களுக்கு எத்தகைய அழிவுகளும் ஏற்படாமல் அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென மக்களுக்கு வேண்டுகோள் விடுக்க ஆவலாக இருந்தேன்.

தற்போது ஒரேயொருபிரச்சனை மாத்திரம் மீதியாக உள்ளது எனது நாட்டுக்காகவும், நான் மிகவும் நேசிக்கும் எனது நாட்டு மக்களுக்காகவும் விடுதலைப்புலிகள் தலைவர் வே. பிரபாகரனுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்த வேண்டுமென நான் கூறுகின்றேன்.

ஜனநாயக நீரோட்டத்தில் அவர் கலந்து கொள்ள விரும்பின் நாங்கள் அவருடன் பேச்சுவார்த்தைக்குத்தாராக உள்ளோம்,

நாடு துண்டாடப்படுவதை தவிர வேறு எந்த கோரிக்கை சம்மந்தமாகவும் அவருடன் பேச்சு நடாத்த நான் ஆவலாக உள்ளேன்.

மனித நேயம்மனித உணர்வுகள் என்பவற்றை நான் பெரிதும் மதிப்பதுடன் அவை மீது நம்பிக்கையும் வைத்துள்ளேன்.

எமது அரசு தமிழ் மக்களுக்காக அளப்பரிய சேவைகளை ஆற்றியு ளது இதுவே தமிழ் மக்களுக்கு [illegible] அவர்கள் தொடர்ந்தும் இத்தகைய கொடூரங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதை நிறுத்திக்கொள்ளுதல் வேண்டும். எமது அரசு ஆட்சிப் பீடமேறி 10 நாட்களுள் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தோம் எட்டு மாதங்களாக தொடர்ந்து பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன விடுதலைப் புலிகளுக்குப் ஆயுதம் வழங்குவதையும், வடக்கு-கிழக்கில் உள்ள எமது இராணுவத்தைவாபஸ் பெறுவதையும் தவிர அனைத்து அம்சங்களையும் நிறைவேற்றினோம்.

பேச்சு வார்த்தைகள் வெற்றியளித்தால் ராணுவம் வாபஸ்பெறவும் தயாராய் யிருப்பதாக கூறியிருந்தோம்.

இப்பேச்சுவார்த்தை சம்பந்தமாக 40க்கும் அதிகமான கடிதங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. ஆனால் துர் அதிர்ஷ்டவசமாக பேச்சு வார்த்தைகள் தோல்வியில் முடிவடைந்தன.

மரண விளிம்பில் இருந்து கொண்டு இறுதிநேரத்தில் நான் வேண்டுகோள் விடாமல் இருந்திருப்பின்நாட்டில் கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டிருக்கும் இத்தாக்குதலுக்கு உள்ளாகி உயிர் பிழைத்தது பெரும்பாலானோர் அறிந்திருக்கவில்லை இறைவனின் அருளினால் மக்களுடன் உரையாற்றக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது.

பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ள விடுதலைப் புலிகள் தலைவர் முன்வருவாரானால் அது தொடர்பாக எமக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது அதன் பின்னர் 50க்கும் அதிகமான தேசிய அரசாங்கங்களைக் கூட அமைத்துக்கொள்ளலாம்.

இச்சந்தர்ப்பத்தில் நான் உலகிற்கு செய்தி ஒன்றை விடுக்க விரும்புகின்றேன்.

நாங்கள் மனித நேயம்மிக்கவர்களாக வாழ வேண்டும் இந்த மனித நேயத்தை அனைவருடனும் பகிர்ந்து கொள்ள கருணை நிறைந்த உள்ளத்துடன் முன்வரவும் வேண்டும்.

# 1ம் தரத்திற்கு ஒரு வகுப்பில் 35 மாணவர்கள் மட்டுமே அனுமதி

பாடசாலைகளில் முதலாம் தரத்திற்கு மாணவர்களை அனுமதிப்பதில் புதிய நடைமுறை கடைப்பிடிக்கப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் ஒரு வகுப்பிற்கு 40 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டு வந்தனர். இனி வரும் காலங்களில் இவ் எண்ணிக்கை 35 ஆகக் குறைக்கப்படும்.

மாணவர்கள் மீது ஆசிரியர்கள் அதிக கவனம் எடுப்பதற்கு வசதியாகவே இந் நடவடிக்கை பயன்படும் எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளையில் முதலாம், இரண்டாம் தர மாணவர்களுக்கான போதனைகள் யாவும் புதிய கல்விச்சீர்திருத்தத்துக்கு அமைவாக நடைபெறவுளளதாகவும் மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது.


# மரண அறிவித்தல்

## சவரிமுத்து சந்தியாப்பிள்ளை

நாரந்தனை மேற்கு ஊர்காவற்றுறையைச் சேர்ந்த சாமியார் என அழைக்கப்படும் சவரிமுத்து சந்தியாப்பிள்ளை சனிக்கிழமை [1-1-2000] நாகர் கோவிலில் காலமானார், அன்னார் காலஞ்சென்ற சந்தியாப்பிள்ளை மாக்கிரேட்டின் அன்புக் கணவரும் மரியதாஸ், திருமதி கதறீன் அன்ரன் [மலர்], திருமதி ரீட்டா குமாரவேலு, துரைரத்தினம் [டென்மார்க்], திருமதி இந்திரா நித்தியானந்தம் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி மரியதாஸ் யூக்கனிஸ்ரா [ஆசிரியை சிறிய புஸ்பம் மகளிர் வித்தியாலயம், கரம்பன்], திரு அன்ரன், காலஞ்சென்ற ஐ. குமாரவேல் (மதுவரி உத்தியோகத்தர்), திருமதி ஜெஸிந்தா (டென்மார்க்), திரு. நித்தியானந்தன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாருமாவார்,

அன்னாரின் பூதவுடல் இன்று திங்கட்கிழமை நாகர் கோவில் குடாரப்புவில் நல்லடக்கம் செய்யப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்

சபாரத்தினம்

[மதுவரித் திணைக்களம் திக்கம் வடிசாலை, பருத்தித்துறை]

நாகர்கோவில்,

00043


இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000-ம் ஆண்டு ஜனவரி மாதம் 03ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

### விடுதலைப்புலிகள் . . .

தளர்த்துதல் மற்றும் சமாதானத்துக்கான நடவடிக்கைகளை முன்னெடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதியுடன் விரைவில் பேச்சுவார்த்தை ஒன்றைநடாத்துவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதாக ஆயர்கள் இராயப்பு யோசப் மல்கம் றஞ்சித் ஆகியோர் தெரிவித்துள்ளனர்

இவ்விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவிக்கையில்விரைவில் இச்சந்திப்பு இடம்பெறும் என்றும்தேர்தல் வெற்றிக்கு பின்னர்வன்னிக்கு உணவு மற்றும் மருந்துப் பொருட்களை கொண்டு செல்வதற்காக கட்டுப்பாடுகளை தளர்த்துவதாகவும் சமாதான முற்சிக்கான நடவடிக்கைகள் படிப்படியாக முன்னெடுக்கப் போவதாக ஜனாதிபதியிடம் வலியுறித்தப்போவதாகவும் தெரிவித்துள்ளார்

எனினும் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமார துங்கவை சந்தித்து பேசிய பின்னரேஅடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி தீர்மானிக்க முடியும் என்றும் அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்

# புத்தாயிரமாம் ஆண்டின் முதல் தவணை சகல பாடசாலைகளிலும் இன்று ஆரம்பம்

([illegible])

புத்தாயிர[illegible] ஆண்டி[illegible] முத லாம் தவணை இன்று [illegible] பாடசாலைகளும் ஆரம்பமாக உள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளையில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நடைபெற்ற க. பொ. த. (சாதாரண) தரப்பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணிகள் இடம்பெறும் 57 பாடசாலைகளும் இன்று ஆரம்பிக்கப் படமாட்டாது என்றும் இப்பாடசாலைகள் ஜனவரி மாதம் 14ம் திகதி ஆரம்பமாகுமெனவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

### மட்டக்களப்பில்

# மருத்துவ பீடம் அமைப்பதற்கு 500 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும்

## புனர்வாழ்வு அமைச்சின் செயலர்

(மட்டக்களப்பு)

மருத்துவபீடம் அமைபதற்கு 500 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்வதற்கும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக இணக்கம் தெரிவித்துள்ளதாகமட்டக்களப்பு மாவட்ட புனர்வாழ்வு அமைச்சின் இணைப்பாளர் சோ. கணேசமூர்த்தி தெரிவித்தார்.

மேற்படி பீடம் அமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு ஜனதிபதி உயர்கல்வியமைச்சர் ரிச்சட் பத்திரனவைக் கேட்டுள்ள மேலும் அவர் எமது செய்தியாளர்களிடம் தெரிவித்தார் விரைவில் இதன் அமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

# யாழ். பல்கலைக்கழக (வெளிவாரி) பரீட்சைகள் தை 10 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக 1997/98ம் ஆண்டிற்கான வெளிவாரிப் பரீட்சைகளின் இரண்டாம் ஆண்டு பரீட்சை இம்மாதம் 10ஆம் திகதி ஆரம்பமாகும் என்றும் மூன்றாம் ஆண்டு பரீட்சை இம்மாதம் 25 திகதி ஆரம்பமாகும் எனவும் யாழ். பல்கலைக் கழக பதிவாளர் க.குணராசா தெரிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சைகளுக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது அனுமதி அட்டைகளை யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பரீட்சைப் பிரிவில் இன்று திங்கள் முதல் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

வவுனியா வளாகத்தில் தோற்றும் பரீசாத்திகள் வளாகத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்

# வன்னியில் மண்ணெண்ணெய் தட்டுப்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சிக்கு அரசினால் அனுப்பப்படும் மண்ணெண்ணெயின் அளவு குறைந்து வருவதால்இங்கு மண்ணெண்ணெய்குப்பெரும் தட்டுப்பாடு ஏற்படும் அபாய நிலை தோன்றியுள்ளதாக கிளிநொச்சி அரசஅதிபர் இ. ஐயாத்துரை கவலை தெரிவித்துள்ளார்,

இவ்விடயம் தொடர்பாக அவர் வவுனியா அரச அதிபர் எஸ். கணேஸிற்கு அவசர 'பக்ஸ்' செய்தி ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளார்.

அச்செய்தியில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிளிநொச்சி இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்த வேளையில் மாதம் 1500பரல் மண்ணெண்ணெய் இப்பகுதி மக்களின் தேவைக்கென அரசாங்கத்தால் அனுப்பட்டு வந்தது.

ஆனால் அண்மையில் கிளிநொச்சியில் ஏற்பட்ட தாக்குதல் நிலைமையையடுத்து அரசாங்கத்தால் அனுப்பப்படும் மண்ணெண்ணையின் அளவு 525 பரல்களாகக் குறைக்கப்பட்டு பின்தற்போது 420 பரல்கள் மாத்திரமே அனுப்பப்பட்டு வருகிறது,

இதனையடுத்து மண்ணெண்ணெயின் விலை பெருமளவில் அதிகரிப்பதுடன், பதுக்கல் கொள்ளை லாபம் போன்ற நடவடிக்கைகளும் ஏற்படவாய்ப்புக்கள் காணப்படுகிறது.

இந்நிலையில் இப்பகுதி மக்கள் நன்மைகருதி இங்கு தாரளமாக மண்ணெண்ணெய் அனுப்ப தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு பக்ஸ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பிரபாகரனின் உருவப்படம்

[வவுனியா]

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதியில் இடம்பெற்ற புத்தாயிரம் ஆண்டு நிகழ்ச்சிகளின்போது விடுதலைப்புலிகளின் தலைவர் திரு வே. பிரபாகரனின் 40 அடி உயரமான உருவப்படம் ஒன்று புத்தாண்டை ஒட்டி வைக்கப்பட்டிருந்ததாகவும் மேடையில் 30 அடி உயரமான தமிழீழப்படம் அமைக்கப்பட்டிருந்ததாக வன்னிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

### தேசிய அரசு . . .

ளது.

பதவியை எதிர்பார்த்து தான் அரசில் இணையப் போவதில்லை எனக்கொள்வதற்கு ஒரு நிலைப்பாடு உள்ளது. எனது கொள்கைகளை நிறைவேற்றத் தயாராக இருந்தால் அரசில் இணைவதில் எனக்கு எந்தவிதமான பிரசனையும் இல்லை என்று குறிப்பிட்ட திரு கூரே ஐ. தே. கட்சிக்கு இன்று புதிய தலைமைத்துவம் தேவைப்படுகிறது தலைமைத்துவத்தில் மாற்றம் ஏற்படுமானால் எதிர்வரும் பொதுத் தேர்தலில்கூட ஐ. தே, கட்சி வெற்றிபெறலாம் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதித் தேர்தல் பிராச்சாரக்கூட்டங்களில் ஆற்றி உரையே அவரது வாக்கு வங்கியைக் குறைத்தது என்று திரு கூரே குற்றம் சாட்டினார்.

### களுவாஞ்சி . . .

ரும் இத்தாக்குதலில் கொள்ளப் பட்டார். காயமடைந்த இருவரும் இலங்கை போக்குவரத்து சபையில் கடமையாற்றுபவர்கள் என்றும் பொலிஸார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளையில் மட்டக்களப்பு மியாங்குளம் என்ற இடத்தில் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் ஒன்று முறியடிக்கப்பட்டதாக படைத்தரப்பின் செய்தி ஒன்று நேற்று தெரிவித்தது.